# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14380/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.</u>**

முன்னிலை: முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு C.M.குப்புசாமி,
205, பஜார் தெரு, கணியம்பாடி,
வேலூர் மாவட்டம் – 632 102.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கணியம்பாடி, வேலூர் மாவட்டம்.

*****

மனுதாரர் திரு C.M.குப்புசாமி விசாரணைக்கு வந்திருந்தார். பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர், கணியம்பாடி, வேலூர் மாவட்டம் இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வரவில்லை.

மனுதாரர் 02.08.2007 அன்று பொதுத் தகவல் அலுவலர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கணியம்பாடி, வேலூர் மாவட்டம் அவர்களிடம் 12 இனங்களில் சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். 25.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொதுத் தகவல் அலுவலர் வராத நிலையில் மனுதாரரிடம் விசாரணை நடத்தப்பட்டது. மனுதாரர் இது குறித்துப் பல மனுக்களை அளித்துள்ளதாகக் கூறினார். ஆணையம் 10.12.2007 அன்று முதல் மேல் முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பம் அளித்தபிறகு ஆணையத்திற்கு மேல் முறையீடு தரச்சொல்லி ஆணையிட்டுள்ளது. 10.03.2008 அன்று மனுதாரர் கேட்ட தகவல்களைத் தரும்படி ஆணையம் ஆணையிட்டுள்ளது. மனுதாரர் கேட்டது சாலை தொடர்பானது எனவும், பொதுத் தகவல்

அலுவலர் அளித்த தகவல் தூர் வாரும் பணி குறித்தது எனவும் தொடர்பற்ற தகவல் தரப்பட்டதால் மனுதாரர் ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்துள்ளார். தரப்பட்ட தகவலைப் பார்க்கும்போது மனுதாரர் கேட்ட தகவல்கள் முழுமையாகத் தரப்படவில்லையென்றும், தொடர்பற்ற தகவல்கள் தரப்பட்டுள்ளன என்றும் ஆணையம் முடிவு செய்கிறது. விசாரணை முடிவில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. இவ்வாணை பெறப்பட்ட ஒரு வாரத்திற்குள் மனுதாரர் கேட்ட தகவல்களை ஒன்றன் பின் ஒன்றாக 12 இனங்களுக்கும் தெளிவாக அளித்து, ஒப்புகை பெற்று விவரத்தை ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.
2. இன்றைய விசாரணைக்கு வரச்சொல்லி சம்மன் அனுப்பியும் விசாரணைக்கு வராத பொதுத் தகவல் அலுவலரிடம் ஏன் அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்கு உரிய விளக்கத்தை இவ்வாணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் பெற்று ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

<u>**வழக்கு எண்.14380/விசாரணை/2009**</u>

மாவட்ட ஆட்சியர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலர்,
கணியம்பாடி, வேலூர் மாவட்டம்.

திரு C.M.குப்புசாமி,
205, பஜார் தெரு, கணியம்பாடி,
வேலூர் மாவட்டம் – 632 102.

*"ptl"*